பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்

எபேசியர் 6:10



செய்தி மலர்

செப்டம்பர் 2011

மலர் 12

இதழ் 05



# செயலாளரிடமிருந்து

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே !

எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிற சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களைஆசீர்வதிக்கிறேன்.

அன்பானவர்களே கடந்தமாதம் முழுவதும் கர்த்தர் நம்மையும் நம்சபை மக்களையும் பாதுகாத்து நடத்தி வந்தமையால் அந்த அற்புதங்களின் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். நாம் நினைப்பதற்கும் வேண்டிகொள்வதற்கும் அதிகமாக கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து வந்தார். வியாதியில் விடுதலை, பிரயாணத்தில் பாதுகாப்புதந்தார்,போராட்டங்களின் மத்தியிலும் அதை மேற்கொள்ள வல்லமையை தந்தார்,கண்ணீரின் பாதையில் நடக்கும் போதெல்லாம் ஆறுதல் தந்து அரவணைத்துக் கொண்டார்,நெருக்கப்ட்ட நேரத்தில் கூப்பிட்ட குரலுக்கு பதில் தந்தார்,அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.
இப்படிபட்ட தேவன் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள் தங்கள் வாழ்க்கையில் எந்த சூழ்நிலையை பார்த்தும் பதறாமல் இருப்பார்கள் அதுமாத்திரம் அல்ல நெருக்கத்தின் மத்தியிலும் கூட கர்த்தரை ஸ்தோத்தரிப்பார்கள்.
வேதம் சொல்லுகிறது பிலிப்பியர் 4:6ல் நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்.
எண்ணாகமம் 14:27,28 எனக்குவிரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்குவிரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன்.  நீ அவர்களோடேசொல்ல வேண்டியது என்னவென்றால், நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்ன பிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்.

கர்த்தரின் ஆலயத்திற்கு சென்று கர்த்தரின் செவிகள் கேட்கச் சொல்லுகின்ற விண்ணப்பங்களுக்கு நிச்சயமாய் பதில் உண்டு. கர்த்தருடைய ஆலயத்தில் இருந்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வது நம் கையில்தான் இருக்கிறது.
நீதிமொழி 18:21 இப்படியாகசொல்லுகிறது“மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்”நம் வாயின் வார்த்தையினால் நாம் நம் சரீரம் முழுவதையும் பாவத்திற்குள்ளாக பாவத்தின் உறைவிடமாகமாற்றிக் கொள்கிறோம்.
நீதிமொழி 12:14 இப்படியாக சொல்லுகிறது.அவனவன் தன் தன் வாயின் பலனால் திருப்தியடைவான் அவனவன் கைக்கிரியையின் பலனுக்குத்தக்கதாக அவனவனுக்குக் கிடைக்கும்.என்று

“எண்ணாகமம் 14:19,20-உமது கிருபையினுடைய மகத்துவத்தின்படியேயும், எகிப்தை விட்டது முதல் இந்நாள் வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்து வந்ததின்படியேயும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும் என்றான். அப்பொழுது கர்த்தர்: உன் வார்த்தையின்படியே மன்னித்தேன்.என்கிறார். பிரியமானவர்களே மோசே கர்த்தரை பார்த்து இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும், என்று மன்றாடுகிறார். அப்பொழுது கர்த்தர் உன் வார்த்தையினபடியே மன்னித்தேன் என்று மறுமொழி கொடுக்கிறதை பார்கிறோம். கர்த்தருடைய தாசனாகிய மோசேயுடைய வார்த்தையை கர்த்தர் கனப்படுத்தினார். மோசேக்கு கர்த்தர் உலகப்பிரகாரமான வெகுமதிகளை கொடுத்தார். (எண்ணா 14:12) அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன் என்று, வாக்கு தத்தம் பண்ணிய போதும் அந்த வெகுமதியை விட தன் ஜனங்கள் காக்கப்பட வேண்டும் என்று விரும்பினான்.

யாத்: 32:10ல் இப்படியாக வாசிக்கிறோம், ஆகையால் என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு என்று, பிரியமானவர்களே இஸ்ரவேலர்களின் முரட்டாட்டமான செயல்களினால் கர்த்தர் கோபம் மூண்டு அவர்களை அழிக்கும்படி தன்னை விட்டுவிடு என்று மோசேயிடம் கேட்கும் போது யாத் 32:12 ல் இப்படியாக வாசிக்கிறோம். மோசே கர்த்தரிடம் உமது ஜனங்களுக்கு தீங்கு செய் ‘கு அவர்கள் மேல் பரிதாபம் கொள்ளும் என்று வேண்டிக் கொண்டார், மோசே கர்த்தரிடம் கெஞ்சினார் 32:14 கர்த்தர் தம் ஜனங்களுக்கு செய்ய நினைத்த தீமையை செய்யாதபடிக்கு பரிதாபம் கொண்டார் என்று வாசிக்கிறோம்.

யாத் 14:13,14 ல் பார்கிறோம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன் செங்கடல் தடையாக காணப்பட்டபோது மோசே சொல்கிறார் கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் நீங்கள் சும்மா இருப்பீர்கள, என்று சொல்கிறார். அப்பொழுது கர்த்தர் (யாத் 14 :21) கீழ் காற்றை அனுப்புகிறார், அந்த காற்றானது செங்கடலை இரண்டா பிளந்து இஸ்ரவேல் ஜனங்களுக்கு பார்வோனிடத்தில் இருந்து விடுதலை கொடுத்ததாகவும், அவர்களுக்க எதிராக செயல்பட்ட பார்வோனுடைய சேனையை சிவந்த சமுத்தரத்தில் கவிழ்த்து போட்டது அது கர்த்தரின் ஜனங்களுக்கு எதிராக செயல்படுகிறவர்களுக்கு மகா சங்காரத்தின் நாளாக காணப்பட்டது.

காத்தருடைய ஜனங்களுக்காக உண்மையாகவே பிரதி பலனை எதிர்பார்க்காமல் அவர்களுக்காக பிதாவினிடத்தில் மன்றாடுகிற ஒருவனையும் கர்த்தர் வெட்கப்படவிட மாட்டார், கர்த்தர் அவர்களுக்காக யுத்தம் பண்ணுவார். பிரியமான சகோதரனே, சகோதரியே, ஸ்தோத்திரத்தோடும் விண்ணப்பத்தோடும், கர்த்தருடைய ஆலயத்திற்கு சென்று உன் இருதயத்தை ஊற்றி ஜெபிக்க முன் வருவாயானால் நிச்சயமாகவே கர்த்தர் உனக்காக யுத்தம் பண்ணி உனக்கு சமாதானத்தை கட்டனையிடுவார் என்பதில் சந்தேகமில்லை

கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

வருகின்ற மாத சபை ஊழியங்களில் பங்கு பெறுங்கள், சபையின் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்!

இவண்

கர்த்தரின் பணியில்

அன்பு சகோதரன் A.ஜஸ்டின் சுந்தரராஜ்

# பெலன்

இந்த உலகத்தில் எத்தனையோ விதமான சக்திகள் இருக்கிறது. பணபலம், ஆள்பலம், உயர்கல்வி, அரசியல் செல்வாக்கு, அறிவுதிறன், பேச்சுதிறன், நிர்வாகதிறன் என சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் இவைகள் எல்லாம் காலபோக்கில் மாற கூடியவை,அழியக்கூடியவை. என்றென்றம் நிரந்தரமாக ஒரு மனிதனுக்கு அவசியமான பெலன் எவைகள் என்று வேதம் நமக்கு தெளிவாக கூறுகிறது. அவைகள் ஒவ்வொன்றாக நாம் பார்ப்போம்.

**1.தேவபெலன்**

என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். (எபே 6:10) ஆசா என்ற யூதா அரசனை எதிர்த்து பத்து இலட்சம் பேர்களோடு கூட சேரா என்ற எத்தியோப்பியனாகிய அரசன் போரிட வந்தான். இந்த ஆபத்தான சூழ்நிலையில் ஆசா தேவனை நோக்கி கூப்பிட்டான். கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம் எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணைநில்லும் உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம் கர்த்தாவே, நீர் எங்கள் தேவன் மனுஷன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும் என்றான். அப்பொழுது கர்த்தர் அந்த எத்தியோப்பியரை ஆசாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிய அடித்ததினால் எத்தியோப்பியர் ஓடிப்போனார்கள். (2நாள 14:11,12) பிரியமானவர்களே உலத்தில் காணப்படும் உபத்திரவங்கள் பெரிய சேனையை போல நம்மை கலங்கடிக்கலாம். மனம் கலங்காதிருங்கள் ஆசாவை பாதுகாத்த தேவன் நிச்சயம் உங்களை பாதுகாப்பார்.

தாவீது சொன்னான் சொன்னான் சிலர் இரதங்களை குறித்தும், சிலர் குதிரைகளை குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள். நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை குறித்தே மேன்மை பாராட்டுவோம்(சங் 20:7)

எசேக்கியா என்ற அரசனை எதிர்த்து போரிட அசிரியா ராஜா பெரும் படையோடு வந்தபோது எசேக்கியா விசுவாசத்தோடு சொன்னான் ‘‘அவனோடிருக்கிறது மாம்ச புயம், நமக்குத் துணைநின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்தானே’’ (2நாள 32:8) இந்த வார்த்தையை எசேக்கியா சொன்னபோது கர்த்தருடைய தூதன் அசீரியர்களில் 1,85,000 பேரை ஒரே அடியில் கொன்று குவித்தான். இஸ்ரவேலர் வெற்றி பெற்றார்கள்.

எந்த ராஜாவும் தன் சேனையின் மிகுதியால் இரட்சிக்கப்படான் சவுரியவானும் தன் பலத்தின் மிகுதியால் தப்பான். இரட்சிக்கிறதற்குக் குதிரை விருதா அது தன் மிகுந்த வீரியத்தால் தப்புவியாது.தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கிவிடுவிக்கவும் பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது. (சங் 33:16-19)

**2.சிலுவை என்பெலன்**

சிலுவையைப்பற்றின உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. (1கொரி 1:18) தேவகுமாரன் பாவத்தின் பரிகாரியாக சிலுவையில் மரித்து பின்பு உயிர்த்தார்.அதனால் சிலுவை என்ற கொலை கருவி மகிமையடைந்தது. நீந்துகிறவன் நீந்துவதற்காகத் தன் கைகளை விரிப்பதுபோல் அவர் தமது கைகளை அவர்கள் நடுவிலே விரித்து, அவர்கள் பெருமையையும், அவர்கள் கைகளின் சதிசர்ப்பனைகளையும் தாழ்த்திவிடுவார். (ஏசாயா 25:11) சிலுவை

வடிவத்தில் கடவுள் பாடுகளை சுமப்பார் என ஏசாயா தீர்க்கன் ஏற்கெனவே கூறியிருந்த படி இயேசு சிலுவையில் மரித்தார். அந்த சிலுவைதான் விசுவாசிக்கிற நமக்கு பெலத்தை கொண்டு வருகிறது. மூன்று விதமான பெலனை சிலுவையிலிருந்து நாம் பெற்றுகொள்கிறோம்.

1.முதலாவது சாத்தானின் தலையை ஏசுவின் நாமத்தில் நாம் நசுக்குகிறோம். அவர் உன் தலையை நசுக்குவார் என ஆதியாகமம் 3 ஆம் அதிகாரம் 13 ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். அதே அதிகாரத்தை அவர் நமக்கு தருகிறார். லூக்கா 10 :19ல் இதோ, சர்ப்பங்களையும் தோள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன். ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. என்று அதிகாரம் கொடுக்கிறார்.

2. இரண்டாவதாக: மரண பயத்தை நீக்கினார், தேவாதி தேவன் மரணத்தின் வழியில் கடந்து சென்றதினாலே சாத்தான் கொண்டு வந்த மரணத்தை மேற் கொண்டார் அதனால் மரண பயத்திலிருந்து நம்மை விடுவித்து நீக்கினார் ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார் (எபி 2:14,15)

3. மூன்றாவதாக,: அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். (ரோமர் 8:11). நாம் நித்திய ஜீவனை பெற்ற பிள்ளைகள் ஜீவனுள்ளளோராய் மாறும் பாக்கியத்தை சிலுவையின் மூலம் பெற்றோம். ஏத்தனை பாக்கியவான்கள் நாம், ஏத்தனை பெலமுள்ளவர்கள் நாம்.

3. பரிசுத்த ஆவியானவர் என் பெலன்

பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (சகரியா 4:6) ஆம் பரிசுத்த ஆவியானவர் நமக்கு கொடுக்கப்பட்ட அருள் கொடை "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற

பெற்றீர்கள்.'' (ரோமர் 8:14,15) 

பரிசுத்த ஆவியானவராக இயேசு கிறிஸ்து ஒரு மனிதருக்குள் வாசம் செய்து அறிய பெரிய காரியங்களை செய்து அனேகரை வெளிச்சத்தின் இடத்திற்கு அழைத்து வர விரும்புகிறார். யாரெல்லாம் ஆவியானவரின் நிறைவை கேட்கிறோமோ அவர்களுக்கு உடனே வழங்க ஆண்டவர் சித்தமாய் இருக்கிறார். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். (யோவான் 14:16) அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள் உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். (யோவேல் 2: 28)

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். (ரோமர் 8:26) பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப் 1:8)

கோழையாக இருந்த சீடர்களை வீரர்களா மாற்றினார். கனி கொடுக்க செய்தார், அற்புதங்களை செய்ய வைத்தார், கருவியாக பயன்படுத்தினார். அனேகரை நீதிக்குட்படுத்தினார், பரலோக வாழ்வை ஈந்தார் எத்தனை சந்தோஷம்.

எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. (2 கொரி 10:4)
என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன். (சங் 18:1)

கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார் என் இருதயம் அவரை நம்பியிருந்தது நான் சகாயம் பெற்றேன் ஆகையால் என் இருதயம் களிகூருகிறது என் பாட்டினால் அவரைத் துதிப்பேன். (சங் 28:7)

கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார் கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார். (சங் 29:11)

கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள் (எபே 6:10)

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு. (பிலி-4:13)

கர்த்தருடைய கிருபை உங்களனைவரோடும் இருப்பதாக! ஆமென்

கர்த்தரின் பணியில்

**சகோ. ஸ்டாலின்**

# ஊழியர்கள் பகுதி

## குறைகளில் இருந்து கற்றுக்கொள்வோம்

### போஷிக்கும் உத்திரவாதம்

இயேசு அவர்களை பார்த்து நீங்களே அவர்களுக்கு போஜனம் கொடுங்கள் என்றார். அன்பானவர்களே! சபையை போஷிக்கும் உத்திரவாதம் தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். போஷிப்பதற்காகவே தேவன் நம்மை தெரிந்திருக்கிறார், அழைத்துமிருக்கிறார், ஊழியக்காரர்கள் தம்முடைய மந்தையை வெறுமையோடு அனுப்புகிறார்கள். ஏன் இந்த நிலைமை? உண்மையில் மேய்ப்பவர்களிடத்தில் ஆகாரம் இல்லாத குறையினால் மந்தையை போஷிக்க முடியவில்லை தங்களிடமுள்ள ஜனங்களுக்கு கொடுக்கத்தக்க ஆகாரம் இருதயத்தில் பதித்திருந்தால்தான் ஆகாரம் கொடுக்க முடியும்.

நான் உங்கள் ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டு பேருமாக தெரிந்த உங்களை சீயோனுக்கு அழைத்துக்கொண்டு வந்து உங்களுக்கு என் இருதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை கொடுப்பேன் அவர்கள் உங்ளை அறிவோடும், புத்தியோடும் மேய்ப்பார்கள் என்று கர்த்தர் கூறியுள்ளாா. உங்களில் எத்தனை பேர் உங்கள் சபைக்கு ஆகாரம் கொடுக்க முடியும்? குறைவுகளை நிவர்த்தி செய்கிறவர் கர்த்தர்! முழங்காளில் நில்லுங்கள் வசனத்தை தியானம் பண்ணுங்கள், வெளிப்பாடுகளை பெற்றுக் கொள்ளுங்கள். சபைக்கு அந்த வெளிப்படுள்ள செய்திகளை கூறுங்கள். சபை பெலன் கொண்டு நிற்கும்.

### கடையில் வாங்கும் சரக்கு அல்ல கர்த்தரின் வசனம்.

சில ஊழியக்காரர்கள் முழங்காளில் நின்று பெற்றுக் கொள்ள முயற்சிப்பதில்லை. லூக்கா 9:13 சீஷர்கள் இந்த ஜனங்கள் எல்லாருக்கும் போஜனம் கொடுக்க வேண்டுமானால் நாங்கள் போய் வாங்கிக் கொண்டு வரவேண்டுமே என்று கூறினார்கள். பிரியமான சகோதரர்களே கர்த்தருடைய வசனம் கடையில் கிடைக்கும் பொருளல்ல. நம்மில் சிலர் பிரசங்கத்தை கடையில் வாங்குகிறவர்களாக இருக்கிறோம். நமக்கு கர்த்தர் கொடுக்கும் வார்த்தையை சபைக்கு கொடுப்போம். மாம்சத்தில் பிரசிங்ப்பது ஆத்துமத்தில் பசியாக வந்திருக்கும் மக்களை திருப்தி படுத்துவதாக இருக்காது. அது நிச்சயமாக மனமடிவைதான் கொண்டுவரும்.

### நீங்களே கொடுங்கள்

இயேசு நீங்களே போஜனம் கொடுங்கள் என்று சொன்னார். சீஷர்களுடைய திகைப்பை பார்த்தவுடன் இயேசு அவர்களிடமிருந்து ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அன்னாந்து பார்த்து அவைகளை ஆசீர்வதித்து பிட்டு ஜனங்கள் முன் வைக்கும்படி சீஷர்களிடத்தில் கொடுத்தார். சகோதரரே சிந்தித்து பாருங்கள் ஆகாரம் பரலோகத்தில் இருந்து வந்தது கடையிலிருந்து வரவில்லை எனவே பரலோகத்தில் இருந்து வருகிற ஆகாரத்தை விரும்புகிறீர்களா? அல்லது சபையோரை வெறுமையாக கேலியாகவும், கிண்டலாக பேசி வெறுமையாக அனுப்பிவிட விரும்புகிறீர்களா?

ஒரு போதகர் இப்படியாக கூறினார். என் சபையிலே முதல் வாரத்தில் இன்னாரை பேச அழைத்திருக்கிறேன், இரண்டாவது வாரத்தில் இன்னாரை பேச அழைத்திருக்கிறேன், மூன்றாவது வாரத்தில் இன்னாரை பிரசிங்கிக்க அழைத்திருக்கிறேன், இந்த மாதத்தில் ஐந்தாவது வாரம் வந்தால் நான் பிரசங்கம் பண்ணுவேன் என்றாராம். இப்படி செய்தால் மந்தையில் இருக்கும் ஆடுகள் நிச்சயமாக வேறு மந்தைக்கு சென்று விடும்.. (தொடரும்)

# 2011 ஆகஸ்டு மாத வேத வினாவிற்கான பதில்கள். 

1. ஏசாயா - ஏசாயா 1: 4
2. ஏசாயா - ஏசாயா 26:2
3. ஏசாயா - ஏசாயா 51: 20
4. இஸ்ரவேலில் தள்ளுண்டவர்களுடைய காவற்காரர் 56:8,10
5. ஏசாயா - ஏசாயா 22:4
6. துன்மார்க்கர் - ஏசாயா 57:20
7. ஏசாயா - ஏசாயா 20:2
8. யாக்கோபு வம்சத்தார் - ஏசாயா 22:4
9. ஏசாயா - ஏசாயா 30:18
10. சோவான் - ஏசாயா 19:11
11. கோரேஸ் - ஏசாயா 44:28
12. இஸ்ரவேல் வம்சம் - ஏசாயா 5:1,7
13. இஸ்ரவேலர் - ஏசாயா 5:18
14. ஏசாயா - ஏசாயா 7:14
15. கர்த்தர் - ஏசாயா 40:12

## 2011 ஆகஸ்டு மாத வேத வினாவிற்கு விடை எழுதியவர்கள்

சகோதரி. மரகதம் ஸ்டீஃபன்
சகோதரி. மெர்லின் அஜீத்
சகோதரி. ஜான்ஸி அற்புதராஜ்
சகோதரி. சுகந்தி தம்புகுமார்
சகோதரி. அனுஷுயா டேவிட்சன்
சகோதரர். ஜான்ஸன்

---

**கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர, சகோதரிகளுக்கு, ஓர் அறிவிப்பு வீடியோ மற்றும் ஆடியோ மற்றும் Web Site ஊழியத்தை பொறுப்பெடுத்து நடத்தி வந்த சகோ. பன்னீர் செல்வம் அவர்கள் நிரந்தரமாக இந்திய தேசம் சென்று விட்டதால், அதன் பொறுப்பை சகோ. பால் பாண்டியராஜ் அவர்கள் பொறுப்பெடுத்து நடத்துவார் என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். இது சம்மந்தப்பட்ட காரியங்களை சகோதரரிடம் கேட்டு விவரங்களை அறிந்து கொள்ளவும்**

**சகோதரரின் தொலை பேசி எண்:** 66594586

# 2011 செப்டம்பர் மாத வேத வினா

1. யார் ஜெபம் பண்ணுகையில் கர்த்தருடைய மகிமை தேவாலயத்தை நிரப்பிற்று?
2. காடுகளையும் கோட்டைகளையும் கோபுரங்களையும் கட்டியது யார்?
3. வெள்ளாண்மைப் பிரியனாயிருந்த ஓர் ராஜா யார் ?
4. யாருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது?
5. விரும்புவாரில்லாமல் இறந்துபோனவன் யார் ?
6. மரித்த பின் கனம் பண்ணப்பட்ட ராஜா யார் ?
7. மரிப்பதற்கு முன்னே தனக்கு சொந்த கள்ளறை உண்டாக்கிக் வைத்த ராஜா யார்?
8. மரித்த பின் தன் வீட்டிலேயே அடக்கம் பண்ணப்பட்ட ராஜா யார்?
9. கர்த்தருடைய ஆலயத்திலே தூபபீடத்தின் முன்வைத்து நெற்றியிலே குஷ்டரோகம் பிடித்த ராஜா யார் ?
10. முந்நூறு இரதங்கங்கள்யுடையவன் யார்?
11. கர்த்தருடைய வேத புஸ்தகத்தை வைத்துக்கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதித்தவர் யார் ?
12. வெண்கலப் பிரசங்கபீடத்தை உண்டாக்கியது யார் ?
13. ஆற்றிலே அணைகட்டிய ராஜா யார் ?
14. தன் மகன் துன்மார்க்கமாய் நடக்க, அவனுக்கு ஆலோசனைக்காரியாக இருந்த தாயின் பெயர் என்ன ?
15. எந்த ராஜாவிடத்தில் கர்த்தரின் ஆசாரியரான பராக்கிரமசாலிகளாகிய எண்பது பேர் எதிர்த்து நின்றார்கள்?

விடைகளை வருகின்ற **23-9-2011** க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை 2 நாளாகமம் புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.ஆரோக்கியதாஸ் (99870126) அவர்களிடத்திலும். திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. தாமஸ் (66810423) அவர்களிடத்திலும், போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. ஸ்டீஃபன் (65868048) அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார் இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.

செப்பானியா 3:15

## இந்த மாதம் பிறந்த நாளைக் சிறப்பிக்கிறவர்கள்

செல்வன் : ஜெய்சன் காட்வின்
செல்வன் : ஜெய்சன் ஆன்ட்ரு
செல்வன் : ஞான சிகாமணி ஆசீர்வாதம்
செல்வன் : மிதுன் ராஜ்
செல்வன் : விக்டர் செங்குட்டுவன்
செல்வன் : ஜான் ஜோஸ்வா மில்லர்

செல்வி : ஏஞ்சல் சத்தியராஜ்
செல்வி : லீதியா ஆரோக்கியதாஸ்
செல்வி : சாராள் சத்தியநாதன்
செல்வி : தீபா ராஜன்
செல்வி : பிளஸ்சி பியூலா வில்சன்
செல்வி : ரின்சி வேளாங்கன்னி

சகோதரி. சவுரியம்மாள்
சகோதரி. ஐரின் நிஷா
சகோதரி. மெர்லின் ரோஸ் ஷீலா
சகோதரி. ஜாய் மெட்டில்டா டேனியல்
சகோதரி. செலின் ஷோபினா மேரி
சகோதரி.ஷீலா இன்ப ராணி
சகோதரி. பிரவீணா ரெஞ்சிதம்
சகோதரி. அமுதா
சகோதரி. ஐரின் ஜோசப்
சகோதரி.பெர்னத் அல்ஜியா மேரி

சகோ. பிரானி ராகேஷ்

உச்சிதமான கோதுமையினால் அவர்களை (உங்களை )போஷிப்(பேன்)
கன்மலையின் தேனினால் உ(ங்களை )ன்னைத் திருப்தியாக்குவேன்

சங்கீதம 81:18

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி - திரு.செல்வராஜ்
திருமதி-திரு. சோபியா வசந்த மேரி
திருமதி-திரு. ஹெப்சி பாய் ஜேம்ஸ்
திருமதி-திரு. வில்சன் செல்லையா
திருமதி-திரு. ஜான் பீட்டர்
திருமதி-திரு. நிர்மலா ஜெயசீலன்
திருமதி-திரு. விசு
திருமதி-திரு. ரவிச்சந்திரன்
திருமதி-திரு. அற்புத ராஜ்
திருமதி-திரு. ஃபிராங் வில்லியம்
திருமதி-திரு. ரெத்தினம்
திருமதி-திரு. மாற்க் ஆன்டனி

# 2011 செப்டம்பர் மாத ஆலய ஆராதனை

**வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4 -10 முதல் 5-45 வரை**

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 2-09-2011 | சகோ. ஐசக் துரை | சகோ. ஜஸ்டின் சுந்தராஜ் |
| 9- 09-2011 | சகோ. எபிநேசர் | சகோ.பிரேம்குமார் |
| 16-09-2011 | உபவாச ஆராதனை | |
| 23-09-2011 | சகோ. ரவிச்சந்திரன் | சகோ. கிறிஸ்டோபர் |
| 30-09-2011 | வாலிபர்கள் ஆராதனை | |

**ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5-00 முதல் 6-15 வரை**

| நாள் | செய்தி |
|---|---|
| 4-09-2011 | சகோ. அசோக்குமார் |
| 11-09-2011 | சகோ. ஸ்டாலின் |
| 18-09-2011 | சகோ. ரவிச்சந்திரன் |
| 25-09-2011 | சகோ. விசு |

2-09-2011 அன்று மாலை 7:00 மணி அளவில் சபையின் பொதுமன்றம்
(இடம் சபையின் ஜெப விடு)

3-09-2011- Sunday School Childrens Talent Shows

சகோதரிகள் ஐக்கிய கூடுகை - நாள் 21-09-2011
இடம் : சகோதரி. மெர்லின் அஜீத் அவர்கள் இல்லம் (மங்கா::ப்)
வேத வினா போட்டி (நியாதிபதிகள் மற்றும் ரூத் புத்தகத்தில் இருந்து )

முழு இரவு ஜெபம் -8-09-2011(இடம் : பரிசுத்த பவுல் ஆலயம்
அஹமதி தமிழ் திருச்சபை )

வாலிபர்கள் ஐக்கிய கூடுகை - நாள் 23-09-2011 நேரம் : மாலை **6:30** மணிக்கு
இடம் : சகோதரர். ஆல்வின் முத்தையா அவர்கள் இல்லம் - அபுஹலி::பா

# குடும்ப பகுதி

## கிறிஸ்தவ குடும்பம் பரலோகத்தின் வாசல்

கிறிஸ்தவர்கள் வீடு பயணிகள் தங்கும் விடுதி அல்ல! அது கிறிஸ்துவின் குணங்கள், கோட்பாடுகள், சத்தியங்கள், கற்றுக் கொடுக்கப்படும் ஒரு பள்ளிக்கூடம், கிறிஸ்தவ வீடு பசியை தீர்க்கும் உணவகம் அல்ல, அது இயேசுவின் அன்பும், பண்பும் குடியிருக்கும் ஒரு அன்பு பாசறை. ஆகவே கிறிஸ்தவ இல்லம் ஒரு பரலோகத்தின் வாசல். கிறிஸ்தவ இல்லம் பழி தீர்க்க சதி திட்டம் வகுக்கும் துர்ஆலோசனை தரும் ஸ்தலமல்ல, பரலோக பயணிகளுக்கு பயிற்சி அளிக்கும் ஒரு பணித்தளம் என்று சொன்னால் அது மிகையாகாது. வெறும் செங்களினாலும், சாந்துவினாலும், கட்டப்பட்ட நமது வீடுகள், கிறிஸ்தவ அன்பு எனப்படும் சிமென்டினால் பிணைக்கப்பட்ட குடும்பத்தினர் ஒவ்வொருவரும் ஜீவனுள்ள கற்களாக மாறி தேவன் தாபரிக்கும் ஸ்தலமாக இருக்கும் போது மட்டும்தான் அந்த வீடுகள் தேவன் தங்கும் இல்லங்களாக மலர்கின்றது. பிரியமான சகோதரனே, சகோதரியே, குடும்பங்கள் கட்டப்படும் போது சபைகள் பலப்படுகிறது. சபைகள் எழும்பும் பொழுது நாட்டில் சுபிட்சம் நிலவுகிறது.

ஒரு பெரிய தனவந்தன், புகழ் வாய்ந்த ஓவியர் வர்ணம் தீட்டிய இயேசுவின் படத்தை அதிக விலை கொடுத்து வாங்கினார். அப்படத்தை வீட்டிலே மாட்டுவதற்கு முயற்சித்த போது, சரியான இடம் கிடைக்காமல் திண்டாடினார். உடனே ஒரு கட்டிட கலைஞனை அழைத்து ஆலோசனை கேட்டார். அவன் வந்த அந்த செல்வந்தரின் பங்களாவின் சுவர், அறை, அனைத்தையும் ஆராய்ந்து பார்த்தான். இறுதியாக வந்தவர் அந்த செல்வந்தரை பார்த்து ஐயா, இந்த இயேசுவின் வர்ணபடத்தை வீடடில் மாட்டினால் பொருத்தமாயிருக்காது, அப்படி இந்த படத்தை பொருத்த விரும்பினால், அதற்கு ஏற்றபடி உங்கள் வீட்டை மாற்றியமைத்துக் கட்டுங்கள் என்று கூறிவிட்டு போய்விட்டானாம். ஆம் இயேசு நம் வீடடில் தங்கவேண்டுமானாலும் நமது வீட்டை நாம் சரி செய்ய வேண்டும். தேவன் விரும்பும் குடும்பம் எப்படி இருக்க வேண்டும் என்பதை இக்கட்டுரையில் சிந்திப்போம்.

### கணவன் :

தேவன் விரும்பும் குடும்பத்தில் நாம் முதலில் சந்திப்பவர் கணவனும், தகப்பனுமாயிருக்கிற குடும்பத் தலைவன். இவரது கடமை என்ன என்பதை முதலாவது சிந்திப்போம்.

கிறிஸ்து சபைக்கு தலையாய் இருப்பது போல புருஷனும் மனைவிக்கு தலையாய் இருக்கிறான். ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார் என்றும், ஸ்திரி புருஷனுக்கு தலையாய் இருக்கிறாள் என்று கிறிஸ்துவுக்குள் தேவன் தலைவராய் இருக்கிறார் என்று நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன். ( 1 கொரி 11:3)

## புருஷன் மனைவிக்கு தலையாய் இருக்கிறான்

மனைவி பருஷனுக்கு தலையாயிருக்கிறான் என்று சொன்னவுடனே ஆனுக்கு பெண் அடிமையா? என்ற எண்ணம் அநேக எண்ணங்களில் எழுகிறது அல்லவா? ஆனால் மேலே கொடுக்கப்பட்ட வசனத்தை சற்று ஆராய்ந்து பார்த்தால் இந்த கேள்வி எழ வேண்டிய அவசியமில்லை. (1 கொரி 11:3) வசனத்தின்படி. கிறிஸ்துவுக்கு தேவன் தலையாய் இருப்பது போல ஸ்திரிக்கு புருஷன் தலையாய் இருப்பான். இதிலிருந்து புருஷனுக்கு ஸ்திரியானவள் அடிமை யென்று விளக்கம் கொடுப்போமானால், கிறிஸ்துவும் தேவனுக்கு அடிமை என்று சொல்லலாமே? நிச்சயமாக இல்லை திரித்தத்துவத்தில் தேவனும் கிறிஸ்துவும் சமம் என்பதை நாம் அறிவோம். தேவனுடைய பார்வையில் ஆண் பெண் இருவருடைய ஆத்துமாவும், இரட்சிப்பும் சமத்துவம் வகிக்கிறது. கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறது போல புருஷனும் மனைவிக்கு தலையாய் இருக்கிறாார்.

இங்கு குடும்ப தலைவனை கிறிஸ்துவுக்கும் குடும்பத்தை சபைக்கும் ஒப்பிட்டிருப்பதை பார்கிறோம். கணவன் குடும்பத்திற்கு ஒரு பிரதான ஆசாரியனை போல இருப்பதை விளக்குகிறது. குடும்பத்தின் குற்றங்களுக்காக ஆண்டவரிடத்தில் பரிந்து பேசுவான். குடும்பத்தினர்கள் ஆண்டவருக்கு கனத்தையும், மகிமையையும் செலுத்த தவறும் போது அதை கண்டித்து உணர்த்துவதும் கணவனது கடமை, சுருங்கச் சொல்லின் குடும்பத்தினருக்கு பரிந்து பேசுவது குடும்ப தலைவனின் பொறுப்பு

### தீர்மானம் எடுக்கும் பொறுப்பு

குடும்ப தலைவனின் இன்னொரு பொறுப்பு தீர்மானம் எடுப்பது. எந்தவிதமான குடும்ப விஷயத்திலும் கணவனும் மனைவியும் சேர்ந்து ஆலோசித்து தீர்மானம் எடுக்க வேண்டும். மனைவியின் அறிவான ஆலோசனைகளை கணவன் அலச்சியம் பண்ணாமல் மதிக்க வேண்டும். இதில் இருவருக்கும் நேர்மையான கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது, கணவன் தன் இறுதியான தீர்மானம் எடுக்க வேண்டும்,என்று தேவன் வீரும்புகிறார்..

மனைவி ஒரு பலவீனமான பாண்டம்- பெண் புத்தி பின் புத்தி என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். குடும்பத்தில் எடுக்கப்படும் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் அதனுடைய விளைவிற்கும் கணவன்தான் முழு பொறுப்பு, இதுதான் தேவனுடைய திட்டம். இதை உணராமல் இன்றைக்கு அநேக கணவன்மார்கள் தீர்மானம் எடுக்க பயந்து அதை தன் மனைவியினிடத்தில் ஒப்படைக்கும் போது தேவன் தங்களுக்கு கொடுத்த பொறுப்பை உதாசீனப்படுத்தி உதறி தள்ளுகிறார்கள். பின்பு அதன் மூலமாக வரும் விளைவிற்காக தங்கள் மனைவியிடம் சண்டை வாக்குவாதம். குடும்பத்தின் தீர்மானங்களை புருஷனுக்கு பதிலாக அவரது மனைவியோ அல்லது வேறு உறவினர்களோ எடுக்க முயற்சிப்பது... (மீண்டும் தொடரும்)

# சங்கீத புத்தகங்களை குறித்து தொடர்ந்து தியானிப்போம்

## சங்கீதம்

ஒரு விசுவாசி ஜெபத்தின் மூலமாகவும், துதியின் மூலமாகவும், இறைவனோடு ஐக்கிய படலாம் என்பதை இந்நூல் உறுதிப்படுத்துகிறது.

### தீர்க்கதரிசனமும், நிறைவேறுதலும்

(சங்கீதம் — தீர்க்கதரிசனம்)　　　　புதிய ஏற்பாடு (நிறைவேறுதல்)

(சங் 41:19) என் பிராண சிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனிதனும் என் மேல் தன் குதிகாலை தூக்கினான்.

அவர் அப்படிப் பேசுகையில் ஜனங்கள் கூட்டமாய் வந்தார்கள். அவர்களுக்கு முன்னே பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் என்பவனும் வந்து, இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான்.(லூக்கா 22:47)

(சங் 45:6) தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.(எபி 1:8)

(சங் 69:9) உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது.

அப்பொழுது: உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்தார்கள்.(யோ.2:17)

(சங் 69:21) என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்.

கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்.(மத் 27 : 34)

(சங் 109:4) என் சிநேகத்துக்குப் பதிலாக என்னை விரோதிக்கிறார்கள், நானோஜெபம்பண்ணிக்கொண்டிருக்கிறேன்.

முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று. (யோ 15: 25)

(சங் 109:8) அவன் நாட்கள் கொஞ்சமாகக்கடவது, அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக்கடவன்.

அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது. ( அப் 1 :20)

(தொடரும்)

# Praise the Lord

## நம் சிந்தனைக்கு

## தேவனை மாத்திரம் சார்ந்து வாழுங்கள்

**அன்பானவர்களே அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்.இரண்டு வசனங்களை வாசித்து கடந்து செல்வோம். சகோதர, சகோதரிகளே! நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியமால், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியதக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ( ரோமர்-12:2)**

**கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்ககடவது (பிலிப்பியர்-2:5)**

**அன்பானவர்களே மேலே உள்ள வசனத்தை நாம் தியனித்தோமேயானால் தற்கால கிறிஸ்தவர்களை எச்சரிக்கை செய்கிற வசனமாக காணப்படுகிறது. காரணம் தற்கால கிறிஸ்தவர்களின் வாழ்க்கை தரம் உலக காரியத்துக்கு ஒத்து இருப்பதால் வசனம் இப்படியாக எச்சரிக்கை செய்கிறது. மேலும் திரளான கிறிஸ்தவர்கள் தன் முழு பெலத்தோடு உலக பிரபஞ்சத்தை சுமந்து செல்கிறவர்களாகத்தான் காணப்படுகிறார்கள் இவர்களை பார்த்து தான் வேத வசனம் சொல்கிறது (ரோமர்-12:2) இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் மறுரூபமாகுங்கள். தேவனை மாத்திரம் சார்ந்து வாழுங்கள் என்று நம்மை தட்டி எழுப்புகிறது.**

**விசுவாசமுள்ள ஜெபம்:**

**நாம் தேவனை மாத்திரம்தான் சார்ந்து வாழ்கிறோமா என்பதை நாம் எப்படி அறிந்து கொள்வது? ஆம் இதற்கான பதில் நிறைய இருந்தாலும் நாம் இந்தநாளில் எடுத்துக்கொள்வது என்னவென்றால் ஜெபஜீவியம் தான் அதுவும் விசுவாசமுள்ள ஜெபம்தான். இந்த விசுவாசமுள்ள ஜெபத்தை நாம் எப்படி ஏறெடுக்க முடியும் என்றால் 1.நம்முடைய சுயத்தின் வலிமைக்கு முற்றுபுள்ளி வைத்தால் ஏறெடுக்கமுடியும்.**

**2.நம்முடைய இயலாமையை தேவனுக்கு முன்பாக அறிக்கை செய்வதுதான்.**

**இவ்வாறாக விசுவாசமுள்ள ஜெபத்தை ஏறெடுக்க முடியும் மாறாக அருமையான அழகான கவர்ச்சிமிக்க வார்த்தை ஜாலங்களை போட்டு மக்கள் மத்தியில் தான்மாத்திரம் ஜெபிக்க தகுதியானவன் என்று சான்று பெற துடித்து மனிதர்களை மாத்திரம் சார்ந்து ஜெபிக்கிற ஜெபம் பிரயோஜனமற்றதுதான். இதை தான் இன்றைய சபைகள் செய்து வருகிறது. இதை போல பயனற்ற ஜெபத்தை அஞ்ஞானிகள் கூட ஜெபித்திடமுடியும் தன் முழு இயலாமையையும் உணராத ஜுவியத்திலிருந்து தோன்றும் எந்த ஜெபமும் தேவனுக்கு முன்பாக யாதொரு**

 மதிப்பும்மற்றதேயாகும்.

ஆனால் விசுவாசமுள்ள ஜெபத்தையோ யாதொருவன் தன் இயலாமையையும் நிர்கதியையும் முற்றிலுமாய் உணர்கிறானோ அவன் மாத்திரமே ஏறெடுக்கமுடியும் இதைத்தான் ஆவியினால் ஜெபிக்கும் ஜெபம் என்று வேதம் சொல்கிறது (எபேசியர்-6:18) இது போன்ற ஜெபம் மாத்திரமே தேவனிடத்தில் இருந்து பதிலை கொண்டுவருகிறது.

பதில் கொண்டுவரும் ஜெபம்:

இந்த நாட்களில் நமக்கு மிகுந்த தேவையாக இருப்பது நெடுநேர ஜெபமல்ல மாறாக பதில் கொண்டு வரும் ஜெபம்தான் அதிக தேவையுள்ளதாக காணப்படுகிறது. அதிக ஜெபத்தில் கர்ஜிக்கிற ஜெபத்தில் நெடுநேர ஜெபத்தில் தேவன் பிரியமாக இருக்கிறார் என்று எண்ணுவது நம்மை நாம் ஏமாற்றிக் கொள்வதாக இருக்கிறது. வேதாகம நாட்களிலோ அல்லது திருச்சபையின் சரித்திரத்திலோ வல்லமையான வலிமையான தேவ தாசர்களின் வாழ்க்கையை நாம் பார்த்தோமானால் உதாரணமாக-மோசே, தானியேல், தாவீது,பவுல் மற்றும் மார்டீன் லூத்தர், ஜார்ஜ்முல்லர், வில்லியம்கேரி, கிரண்மெர் இன்னும் பலருடைய வாழ்க்கையை நாம் கூர்ந்து கவனித்தோமானால் இவர்கள் எல்லோரும் விசுவாசமுள்ள ஜெபவீரர்களாகவும் பதில் கொண்டு வரும் ஜெபத்தின் சுதந்திரவாளிகளாகவும் இருந்தார்கள் என்பது தான் உண்மை மேலும் இவர்களை குறித்து ஜெப மாந்தன் என்று சில இன்றைய தேவஊழியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

தனி ஜெபம்

இன்றைய கிறிஸ்துவ மக்களின் பின் மாற்றத்துக்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்தோமானால் இவர்களது தனி ஜெபத்தை அசட்டை பண்ணியதின் நேரடி விளைவே பின் மாற்றத்துக்கான பிரதான காரணமாக காணப்படுகிறது. என்றைக்கு நாம் தனிஜெபத்தை தவிர்க்க நினைக்கிறோமோ அன்றே பின்மாற்றம் ஆரம்பமாகிறது. தனிஜெபம் செய்வதில் தவறுவது பின்மாற்றம் என்றால் நான் கிறிஸ்தவன் என்று சொல்லி கொண்டு ஜெபமே செய்யாதவர்களை எதில் சேர்ப்பது.

சில சகோதரர்கள் இருக்கிறார்கள் சபையிலும் சரி, ஜெபகூடுகையிலும் சரி ஜெபம் செய்யுங்கள் என்று சொன்னால் அவர்களின் பதில் பிரதர் வேறு யாரையாவது சொல்லுங்கள் அல்லது வெட்கமாக இருக்கிறது அல்லது தெரியாது அல்லது எனக்கு எல்லாம் தெரியும் நான் தான் ஞானவான் என்று சிலர் பதில் ஏதும் இன்றி இருப்பார்கள் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன் என்று சொல்லிகொள்பவர்களுக்கு அடிப்படை தகுதி ஜெபிக்க தெரிந்து இருக்க வேண்டும்.இந்த மாதிரியானவர்கள் எந்த தகுதியில் கிறிஸ்துவை நானும் ஏற்றுகொண்டு இருக்கிறேன் நானும் கிறிஸ்துவன் தான் என்று எப்படி கூற முடியும் சகோதரரே, நீங்களும் பின்மாற்றக்காரர்கள் தான்.

(அடுத்த இதழிலும் தொடரும்)

# சகோதரிகள் பகுதி

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமுள்ள சகோதரிகளுக்கு இரட்சகர் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்,

பிரியமானவர்களே! அநேக நேரங்களில் உபத்திரவங்கள் நம்மை சூழ்ந்து கொள்கையில், நாம் கலங்குகிறோம், சாத்தான் மேல் குற்றம் சுமத்துகிறோம். ஆனால் கடல் இருக்கும் வரை அலைகள் இருக்கத்தான் செய்யும், சாத்தான் இருக்கும் வரையில் நம்முடைய வாழ்க்கையில் உபத்திரவங்களும், பாடுகளும், வரத்தான் செய்யும். இவைகளின் மத்தியிலும், நம்முடைய கர்த்தர் சொல்லுகிறார். திடன் கொளளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன், என்று ஆவியானவர் மூலம் திருவுளம் பற்றுகிறார். சகல உபத்திரவங்களை பார்கிலும் நம்முடைய ஆண்டவர் பெரியவர், அவர் நமக்கு ஜெயத்தை தருகிற தேவன். (யோவான் 16:33) சொல்கிறது.

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன். என்றார்.

உபத்திரவங்கள் கஷ்டங்கள் பாடுகள் வரும்போது நாம் சோர்ந்து போகாமல் தேவனை நோக்கி பார்க்க பழகிக் கொள்ள வேண்டும். தேவ பெலத்தை சார்ந்து கொள்ள வேண்டும். அப்பொழுது அவர் நம்மை உயர்த்தி ஜெயம் கொடுக்க வல்லமையுள்ள தேவனாயிருக்கிறார்.

தாவீது பக்தன் சொல்லுகிறார். நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது அதனால் உமது பிரமானங்களை கற்றுக் கொள்கிறேன் (சங் 119:7)

யோபு பக்தன் கண்ணீரோடு சொன்னார். அவர் காயப்பட்டு காயங்களை கட்டுகிறார் அவர் அடிக்கிறார், அவருடைய கை ஆற்றுகிறது. (யோபு 5:18)

பொன்னானது அக்கினி சூளைகுள்ளாக செல்லும் போது அதன் அழுக்குகள் களிம்புகள், எல்லாம் நீங்குகிறது. அதனுடைய கடினத்தன்மை மாறி மென்மையாகிறது. கடைசியில் மிக அழகாக பிரகாசிக்க ஆரம்பிக்கிறது. அது போல கர்த்தர் நம்மை சுத்திகரிப்பதற்காக புடமிட்ட சுத்த பொன்னாக விளங்க செய்வதற்காக, விலையேற பெற்றவர்களாய் மாற்றுவதற்காக நம்மை உபத்திரவங்களின் பாதையில் கொண்டு சொல்லுகிறார்.

ஒரு பட்டு பூச்சி தன் கூட்டிலிருந்து வெயியே வர கஷ்டப்பட்டு முயற்ச்சித்துக் கொண்டிருப்பதை ஒரு சிறுவன் கவனித்தான். அவன் இரக்கப்பட்டு அந்த பட்டு பூச்சிக்கு உதவி செய்யும்படி பட்டு நூல்களை மிக ஜாக்கிரதையாக வெட்டி பூச்சியை வெளியே கொண்டுவந்தான், ஆனால் என்ன நடந்தது? பட்டு பூச்சியால் பறக்க முடிய வில்லை அதனுடைய உடல் மிக பருமனாக இருந்தபடியால் கிழே விழுந்தது. முடிவில் ஏராளமான எறும்புகள் அதை சூழ்ந்து பிடித்து இழுத்து சென்றது.

அதை பார்த்து கொண்டிருந்த சிறுவனின் தகப்பனார் சொன்னார், மகனே அந்த பட்டுபூச்சிக்கு நீ உதவி செய்வதாக எண்ணிக் கொண்டு, கேடு விளைவித்து விட்டாய். பட்டுபூச்சி அதன் கூட்டிலிருந்து வெளியே வர பல மணி நேரம் போராடும்

 அந்த போராட்ட நேரம் அதன் தசை நார்கள் பலபட்டுகிற நேரம் சரீரம் ஒடுங்கி அதனுடைய இறக்கைகள் வலுவுள்ளதாய் மாறுகிற நேரம் ஆனால் நீ அந்த நூல்களை வெட்டி விட்டபடியினால் எளிதாக வெளியே வந்து விட்டது அதன் சரீரம் கனத்து இருந்தபடியால் பறக்க முடியாமல், முடிவில் எறும்புகளுக்கு இரையாயிற்று.

அது போல உபத்திரவங்கள் நம்மை கர்த்தருக்குள் பெலனுள்ளவர்களாய் மாற்றுகிறது. ஆவியில் வல்லமையுள்ளவர்களாய் மாற்றுகிறது. அது மாத்திரமல்ல ரோமர் 5:3,4 சொல்லுகிறது, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து. உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்.

யோசேப்பு எவ்வளவு பொறுமையோடு உபத்திரவங்களையும் பாடுகளையும் சகித்தார். சொந்த சகோதரர்களால் தள்ளப்பட்டார். மீதியானியருடைய கையில் விற்கப்பட்டார். போத்திபார் வீட்டில் வீண்பழி சுமத்தப்பட்டார், சிறைச்சாலையில் பாடுகளை அனுபவிக்க வேண்டியதாயிருந்தது ஆனாலும் அவர் பொறுமையை இழக்கவில்லை, முறுமுறுக்கவில்லை எனவே முடிவிலே எகிப்தின் அதிபதியாக உயர்த்தப்பட்டார்.

நாம் உபத்திரவத்தின் பாதையில் செல்ல செல்ல தேவனுடைய ஆறுதலை பெறுகிறது மாத்திரமல்ல, நாமும் மற்றவர்களுக்கு ஆறுதல் செய்ய திராணியுள்ளவர்களாய் மாறிவிடுகிறோம், தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். (11 கொரி 1:4)

பிரியமானவர்களே, நாமும் உபத்திரவங்களை கண்டு சோர்ந்து போகாமல், விழுந்து விடாமல், சிலுவையில்லாமல் சிங்காசனம் இல்லை, உபத்திரவங்கள் இல்லாமல் உன்னதம் இல்லை, பாடுகள் இல்லாமல் பரலோகம் இல்லை, என்பதை உணர்ந்து தேவனையே சார்ந்து கொள்வோம், சோர்ந்து போகாமல் நித்திய இராச்சியத்தை சுதந்தரித்து கொள்ள நம்மை பாத்திரவான்களாக்குவோமாக.

தேவன்தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து பாதுகாத்துக் கொள்வாராக ஆமென்!.

கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரி. **மெர்லின் அஜீத்**

## சபையின் வாக்குத்தத்தம் 2011

**கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார் கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்.**

சங்கீதம் 29:11

# கடந்த மாத நிகழ்வுகள்

**இந்திய தேச ஊழியர் போதகர் எலிசா அன்பு அவர்கள் நம்முடைய மத்திலே கலந்து கொண்டு தேவ செய்தி அளித்தார்கள், மற்றும் சகோ.ஆரோக்கியதாஸ் மற்றும் சகோதரி அனிதா ஆரோக்கியதாஸ் அவர்களின் இளைய மகளை ஆலய பிரதிஷ்டையும் செய்து வைத்தார்**













அநேகர் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்றனர்

உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயலாளர் சகோ. ஜஸ்டின் சுந்தராஜ்

97153421- 97376456

பொருளாளர் சகோ. ஜெயசேகர்

23711698 - 66442727 - 90024654

பெண்கள் ஐக்கிய சங்க தலைவி

சகோதரி : அனுஷ"யா டேவிட்ஸன்

23922536-97148472

வாலிப ஐக்கிய குழு தலைவர்

சகோ. எபிநேசர் 23922058- 66857827

சபையின் அஞ்சல் விலாசம்

your Name...... Post box no 46795,

Fahaheel 64018 KUWAIT

Church E mail Address

ahmaditamil@hotmail.com

Church Website Address

www.ahmaditamilcongregation.org

Transport Ministry
Bro. Stephen 65868048

Prayer Ministry
Bro. Stalin - 66021072

Camp Ministry
Bro.Arputha raj- 55237049

Orphanage Ministry
Bro. Thomas - 66810423

Auditor
Bro. Muthaiah- 66263418

Sunday School Ministry
Bro. Christopher- 99387644

Missionary Ministry
Bro. Arokiyadhas- 99870126

Choir Ministry
Bro. Easu rathinam- 97545812

Magazine Miinstry
Bro. Isaacdurai- 66015503

Constitution Supervisor
Bro. Ezekiel - 23913257

தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும், உங்களுக்காக ஜெபிக்க
எப்பொழுதும் ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது

Private circulation